**இலங்கை ரேபிள் ரெனிஸ் சங்கம் - 2021**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை ரேபிள் ரெனிஸ் சங்கத்தின் (''சங்கம்'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் வருமான செலவுக் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், நிதி நிலைமைக் கூற்று , வருமானச் செலவுக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான விடயங்களை மாற்று வழிகளில் எனக்கு உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாமல் இருந்தது. இந்த விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்று , வருமானச் செலவுக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் ஏதேனும் சீராக்கங்கள் தேவைப்படுகின்றனவா என்பதை எனக்கு தீர்மானிப்பதற்கு முடியாமல் இருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். இருப்பினும், எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 384,821 ஆன பெற வேண்டியவை 05 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாது மற்றும் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்படாமல் நிலுவையாக இருந்தன. | இந்த நிலுவைகள் பழைய நிலுவைகள் மற்றும் அவை துணைக் குழுவொன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. துணைக் குழுக்களை நியமித்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை தொகையை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 760,820 ஆன செலுத்த வேண்டியவை 05 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்படாது மற்றும் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்படாமல் நிலுவையாக இருந்தன. | இந்த நிலுவைகள் பழைய நிலுவைகள் மற்றும் அவை துணைக் குழுவொன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. துணைக் குழுக்களை நியமித்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டியவற்றை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.2 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வங்கி மீதி | 992,022 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் வங்கி இணக்கங்கள் | இந்த நிலுவைகள் பழைய நிலுவைகள் மற்றும் அவை துணைக் குழுவொன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டுள் | தேவைப்படுகின்ற தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| வருமானம் | 6,353,161 | பற்றுச்சீட்டுக்கள் | | |
| செலவுகள் | 6,360,603 | கொடுப்பனவு | | |

| | |
|---|---|
| உறுதிச்சீட்டுக்கள் | என. துணைக் குழுக்களை நியமித்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான சங்கத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,442 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,152,953 ஆக இருந்தது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 1,145,511 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. செலவுகள் ரூபா 4,389,465 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 5,534,975 ஆல் அதிகரித்தமையே இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கங்களின் பிரமாணங்களின் (III) ஆம் பிரிவின் 7(xii) ஆம் பிரிவின் பிரகாரம், சங்கத்தால் சான்றளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணிசமானளவு தாமதத்துடன் சமர்ப்பிக்கப்படடிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | தேசிய விளையாட்டு சங்கங்களின் பிரமாணங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |